# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வடக்கு மாகாணம்

## முதலாந் தவணைப் பரீட்சை – 2016

## தமிழ் மொழியும் இலக்கியமும் I,II

சுட்டெண் :. ..........................................  தரம் : 10  நேரம் :- 3.00 மணித்தியாலங்கள்

### பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. “கானத்து இடையிருந்து வந்து கமலமதுவுண்ணும்” - இங்கு **கானம்** என்பதன் பொருள்
 i. ராகம்  ii. காடு  iii. சோலை  iv. குளம்

2. “அவனியைப் பசுமையாக்குவன தாவரங்களே” – **அவனி** என்பது
 i. வெளி  ii. வளி  iii. பூமி  iv. புவனி

3. “இரவாது தான் ஈதல் எத்துணையும் ஆற்றல் இனிது” **ஈதல்** என்பதன் ஒத்தகருத்துச் சொல்
 i. இரத்தல்  ii. பழித்தல்  iii. பெறுதல்  iv. கொடுத்தல்

4. “புராதன காலத் தமிழர்கள் சீனர்களைப் போல சித்திர எழுத்துக்களை எழுதினர்” – **புராதனம்** என்பதன் எதிர்க்கருத்து.
 i. நவீனம்  ii. பழைமை  iii. முற்காலம்  iv. புண்ணியம்

5. “வில் வித்தையில் சிறந்த வீரன் விஜயன்” – **வீரன்** என்பதன் எதிர்ப்பாற் சொல்
 i. வீராங்கனை  ii. வீரத்தி  iii. வீரகத்தி  iv. வீரள்

- **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. எருமைக்கு கன்று போல முயலுக்கு......
 i. பறள்  ii. குஞ்சு  iii. குருளை  iv. குட்டி

7. கதையின் கருப்பொருள் வாழ்க்கையோடு தொடர்புபட்டதாக இருக்க வேண்டும். கருப்பொருள் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
 i. வரையறை  ii. எல்லை  iii. உள்ளடக்கம்  iv. பிரச்சினை

8. அகில இலங்கை இலக்கிய விழாவிற்கு யாழ்ப்பாணக் கிளையிலிருந்து.......... ஐம்பது பேர் சென்றனர்.
 i. செயலாளர்  ii. பொருளாளர்  iii. தலைவர்  iv. பேராளர்

9 CARTOON (கார்ட்டூன்) எனும் ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான கலைச் சொல்.
 i. வலைத்தளம்  ii. கேலிச்சித்திரம்  iii. வரைபடம்  iv. இணையம்

10. மகிழ்ச்சியை வெளிப்படுத்தப் பயன்படும் தொடர்.
 i. ஆடிப்பாடி  ii. விட்டு விலகி
 iii. தட்டுத் தடுமாறி  iv. தன்னந்தனி


kalvi.lk

11. “முற்காலத்தில் தமிழ் மக்கள் எழுதிவந்த எழுத்துக்களில் வடமொழி எழுத்துக்கள் இருக்கவில்லை – வடமொழி எழுத்துக்களைக் குறிப்பது.
i. செந்தமிழ்
ii. வட்டெழுத்துக்கள்
iii. கிரந்த எழுத்துக்கள்
iv. உயிர் மெய் எழுத்துக்கள்

12. “பயனற்றது என்ற கருத்தைத் தரும் உவமைத்தொடர்.
i. செவிடன் காதில் ஊதிய சங்கு போல.
ii. உள்ளங்கை நெல்லிக்கனி போல.
iii. ஆடி ஓய்ந்த பம்பரம் போல.
iv. சேற்றில் மலர்ந்த செந்தாமரை போல.

13. மதுவுக்கு அடிமையாகிய சேவகன் குடிமுழுகிப் போனான். **“குடிமுழுகிப் போதல்”** என்ற மரபுத்தொடர் உணர்த்துவது.
i. கேடு செய்தல்
ii. இறந்து போதல்
iii. முற்றாய் அழிதல்
iv. மாறுபடல்

14. காடும் காடு சார்ந்த இடமும்.
i. நெய்தல்
ii. மருதம்
iii. முல்லை
iv. குறிஞ்சி

15. தரவை - எப்பிரதேச வழக்கு?
i. வடக்குப் பிரதேசம்
ii. கிழக்குப் பிரதேசம்
iii. தென்னிலங்கை
iv. மலையகம்

16. முதற்பாட்டின் இறுதியும் வரும் பாட்டின் முதலும் ஒன்றாக வருமாறு பாடப்படும் பாடல் வகை.
i. அந்தாதி
ii. அகராதி
iii. கலம்பகம்
iv. அனுபந்தம்

17. வைக்கோல் அடுக்கப்படுவது.
i. பட்டறை
ii. சிப்பம்
iii. பாடம்
iv. போர்

18. “பால் போன்ற நிலவு ” – வந்துள்ள அணி.
i. தற்குறிப்பேற்றம்
ii. உருவகம்
iii. எதுகை
iv. உவமை

19. “கூட்டங் கூட்டமாக வாதத்திற்கு வரலாம் என்றார் நாவலர்” இதில் கூட்டங் கூட்டம் என்பது.
i. இரட்டைக் கிளவி
ii. அடுக்கிடுக்குத் தொடர்
iii. அடுக்குத்தொடர்
iv. இணைமொழி

20. ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படுவது.
i. வெள்ளிவிழா
ii. பொன்விழா
iii. தகரவிழா
iv. முத்துவிழா

21. இனவெழுத்து இல்லாத தொகுதி.
i. வல்லின எழுத்துக்கள்
ii. மெல்லின எழுத்துக்கள்
iii. இடையின எழுத்துக்கள்
iv. உயிர் எழுத்துக்கள்

22. பின்வருவனவற்றுள் பொருட் பெயர் அல்லாதது.
i. புரவி
ii. பழம்
iii. படை
iv. மார்பு


kalvi.lk

23. பெயராகவும் வினையாகவும் வழங்கும் சொல்.
i. குணம் ii. கரை iii. மழை iv. கண்

24. "அகலிகை மீண்டும் கல்லானாள்" இது
i. தனி வாக்கியம் iii. கலப்பு வாக்கியம்
ii. கூட்டு வாக்கியம் iv. ஏவல் வாக்கியம்

25. பனை + ஓலை என்பதைச் சேர்த்தால்
i. பனை ஓலை ii. பனையோலை iii. பனமோலை iv. பன்னோலை

26. பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்ம்மயக்கம்
i. அண்ணல் ii. மன்னர் iii. தெண்ணீர் iv. கன்று

27. "கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினேன்" இதில் வந்துள்ள எழுவாய்.
i. கட்டுரைப் போட்டி ii. பரிசுகள் iii. முதலிடம் iv. நான்

28. குந்தியிருந்து தின்றால் குன்றும் மாளும் என்னும் பழமொழியின் கருத்து
i. சொகுசு வாழ்க்கை குன்றினைப் போல உயர்ந்தது.
ii. சோம்பேறியின் வாழ்க்கை எந்த நாளும் சிறப்புடையது
iii. முயற்சி திருவினையாக்கும்.
iv. முயற்சியற்றவனின் பெருஞ்செல்வம் விரைவில் அழியும்.

29. பின்வருவனவற்றுள் எதிர்மறைச் சொல்
i. அடக்கமுடையார் iii. நிழலாகாது
ii. உறுமீன் iv. வளரும்

30. பின்வருவனவற்றுள் உயர்திணை அல்லாதது
i. மண்டுகம் ii. கற்றார் iii. நல்லோர் iv. மன்னர்

- **பந்தியை வாசித்து பிரதான கருத்தினைத் தெரிவு செய்க**

31. சிறுவர்கள் எதிர்கால சந்ததியினராவார். இவர்கள் நாட்டின் அரும் பெரும் சொத்துக்கள். கற்க வேண்டிய வயதில் சிறுவர்கள் வேலைக்குச் செல்கின்றனர். சிலர் துஷ்பிரயோகத்துக்குள்ளாகின்றனர். கல்வியினால் சிறுவர்களை நன்நெறிப் படுத்துவது பெரியோர்களின் கடமையாகும்.

i. சிறுவர்கள் இந் நாட்டின் முதுகெலும்பு
ii. சிறுவர்கள் எதிர்காலச் சந்ததியினராவார்
iii. கற்க வேண்டிய வயதில் சிறுவர்கள் வேலை செய்கின்றனர்.
iv. சிறுவர்களை நல்வழிப்படுத்தி கல்வி பெற வைப்பது பெரியோர்களின் கடமையாகும்.

32. முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே பெஸ்கி என்ற பாதிரியார் ஒருவர் இத்தாலி தேசத்தில் இருந்து இங்கு வந்தார். அவர் தமிழில் தேர்ச்சி பெற்றவர். வீரமாமுனிவர் என்ற தமிழ்ப் பெயரும் வைத்துக் கொண்டார். இப்போதுள்ள சில உயிரெழுத்துக்கள் அவருடைய எழுத்துச் சீர்திருத்தத்தினாலே ஏற்பட்டவை.
i. இத்தாலி தேசத்துப் பாதிரியாராகிய வீரமாமுனிவர் தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்களைச் செய்தார்.
ii. இத்தாலி தேசத்தில் இருந்து வந்தார் வீரமாமுனிவர்
iii. பாதிரியார் வீரமாமுனிவர் என்ற தமிழ்ப் பெயர் வைத்தார்.
iv. பெஸ்கி என்ற பாதிரியார் இங்கு வந்தார்.


kalvi.lk

- முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

33. நீதியின் வழியாலன்றி உலகத்தைச்
 i. செம்மைப்படுத்த வேண்டும்.
 ii. செம்மைப்படுத்த முடியும்.
 iii. செம்மைப்படுத்த முடியாது.
 iv. செம்மைப்படுத்தப் போதுமானது.

34. மனிதனுக்கு கல்வியை விட அன்பு, பணிவு, உள்ளடக்கம், முதலான உயர் குணங்கள்.
 i. முக்கியமானவை.
 ii. முக்கியத்துவம் வாய்ந்தது.
 iii. முக்கியமானதாகும்.
 iv. முக்கியமானவையாகும்.

35. எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.
 i. தமிழ்பாட வழிகாட்டிக் கைந்நூல் வெளியிடப்பட்டது.
 ii. தமிழ்ப்பாட வழிகாட்டிக் கைநூல் வெளியிடப்பட்டது.
 iii. தமிழ்ப்பாட வழிகாட்டிக் கைந்நூல் வெளியிடப்பட்டது.
 iv. தமிழ்பாடவழிகாட்டிக் கைந்நூல் வெளியிடப்பட்டன.

36. அவனுக்கு எத்தனையோ புத்திமதிகள் சொன்னேன்………….. அவன் கேட்க வில்லை
 i. ஆனாலும் ii. எனவே iii. அவ்வாறு iv. எப்படியாயினும்

37. டெங்கு நோய்ப் பாதிப்புப் பற்றி வழிப்படுத்துவதற்கு மக்கள் மத்தியில் ………… மேற்கொள்ளப்பட வேண்டும்.
 i. பிரசுரம் ii. பிரசங்கம் iii. பிரசாரம் iv. பிரமாணம்

38. நாட்டில் காணாமல் போனோர் பற்றி விசாரிப்பதற்காக ஜனாதிபதியால் ……… நியமிக்கப்பட்டது.
 i. வேட்பாளர் குழு
 ii. விதப்புரைக் குழு
 iii. விசாரணைக்குழு
 iv. ஆணைக் குழு

39. செம்மொழி மாநாட்டில் தமிழ் மொழி ……….. அடைந்துள்ளது.
 i. வளம் பல பெற்று
 ii. அழுத்தம் திருத்தம் பெற்று
 iii. ஒல்காப் பெரும் புகழ்
 iv. நுண்மாண் நுழை புலம்

40. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை ஒழுங்கு பெற அமைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும் அவ்வாறு அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறை யாது?
 அ. அப்போது தசரதனிடம் இரு வரங்கள் கேட்டாள்.
 ஆ. அதன் பின் இராமனும், சீதையும் வனம் சென்றனர்.
 இ. கைகேயியின் மாளிகைக்கு தசரதன் வந்தான்.
 ஈ. கைகேயி கேட்ட வரங்களால் தசரதன் மயங்கி வீழ்ந்தான்.
 உ. கைகேயி கூனியின் வார்த்தையால் மனம் மாறித் தனது அழகான கோலத்தை மாற்றினாள்.

 i. உ,இ,அ,ஈ,ஆ ii. உ,அ,இ,ஈ,ஆ iii. இ,உ,அ,ஆ,ஈ iv. இ,அ,உ,ஆ,ஈ

**(40 x 1= 40 புள்ளி**



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## முதலாந் தவணைப் பரீட்சை – 2016
## தமிழ் மொழியும் இலக்கியமும் II

தரம் : 10

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **இவ் வினாத்தாளுக்குரிய மொத்தப் புள்ளிகள் 80 ஆகும்.**

(1). சுருக்கமான விடை தருக.

1. பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
   **"பசுமை குளிரிளஞ் சூடும்"**
2. **திருத்த எண்ணிய கிழியோ"**
   i. கிழி என்பதன் பொருள் யாது?
   ii. கிழி என்பது பெயராக வரத்தக்க வகையில் வாக்கியம் எழுதுக.
3. **"நீ கவனமாகப் படித்தால் பரீட்சையில் சித்தி அடைவாய்"** இவ்வாக்கியத்தின் *தலைமைத்* தொடர் யாது?
4. **சுரதா, முடியரசன், வாணிதாசன் ஆகியோர் பாரதிதாசன் வழி வந்தவர்கள். "கற்பனை அல்ல சிந்தனையே கவிதைக்கு வேண்டும்" என்ற சுரதா தமிழில் வித்தியாசமான அறிவுநிலைக் கவிதைக்கு வித்திட்டவர்.** - இவ்வுரைப் பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள நிறுத்தக் குறிகள் யாவை?
5. **"யானை இடையன் எங்கே"** என்பது
   i. எவ்வகை வழு ஆகும்?
   ii. இதன் வழாநிலை வடிவம் யாது?
6. பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றுக.
   **"இனிமேல் உம்மடை தேத்தண்ணி குடிக்கமாட்டேன்"**
7. உறவு முறைக் கடிதம் ஒன்றில் இடம் பெறாத உறுப்புக்கள் எவை?
   முகவரி. விளிப்பு. உள் முகவரி, முடிப்பு, தலைப்பு, உடல்
8. **கண்ணகி கவலையால் வாடினாள்** இங்கு இடம் பெற்ற,
   i. வேற்றுமை உருபு யாது?
   ii. வேற்றுமைப் பொருள் யாது?
9. "திருமகள் போல அவள் நின்றாள்" இங்கு இடம் பெற்ற அணி யாது? விளக்குக.
10. கட்டுரையில் அமைய வேண்டியவை எவை?
    முரண்படக் கூறல், பந்திகள் ஒழுங்குற அமைத்தல், கூறியது கூறல், உதாரணம் காட்டி விளக்குதல், சந்தேகம் ஏற்படக் கூறல், பயனற்ற சொற்களைப் பயன்படுத்தல்.

**(10 x 2 = 20 புள்ளிகள்)**

(2). பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிந்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

அ. இயற்கை அற்புதமானது பசுமையானது. வானளாவ உயர்ந்த மரங்கள் செடி, கொடிகள், மலைகள், காடுகள், வற்றாது ஓடி வளம் பெருக்கும் ஆறுகள் இவை அனைத்தும் இயற்கை தந்த வளங்களே ஆயினும் மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் மனிதனின் ஆசைகள், எண்ணங்கள், தேவைகள் - பசுமை உலகைச் சிதைத்து வருகின்றன. இந் நிலையில் பசுமை உலகைப் படைப்போம் என்னும் கருத்தினை வலியுறுத்தி **விளக்கக் கட்டுரை** ஒன்று எழுதுக.



kalvi.lk

ஆ. நாளாந்தம் வீதி விபத்துக்கள் அதிகரித்து வரும் இன்றைய சூழலில் வீதி ஒழுங்குகள் எவை என்பது குறித்தும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தும் ஒரு **மேடைப் பேச்சு.**

இ. ஆங்கில மொழி மூலக் கல்வி முதன்மை பெற்று வரும் இன்றைய காலகட்டத்தில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்கும் மாணவனுக்கும் தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் மாணவனுக்கும் இடையில் நடைபெறும் ஓர் **உரையாடல்.**

ஈ. மாதவன் ஆசிரியராக பத்து வருடங்கள் கடமையாற்றி, இன்று தான் படித்த பாடசாலைக்கு அதிபராக நியமனம் கிடைத்துச் செல்கின்றான். வாயிலில் நின்று நோக்குகின்றான். எல்லாமே மாற்றம். புதிய கட்டடங்கள் புதிய முகங்கள் அவற்றின் நடுவில் அவன் மனதில் ஏதோ ஒரு வலி முள்ளாய்க் குத்துகிறதை அவன் உணர்ந்தான். அந்தச் சம்பவமே அவன் உயர்விற்குக் காரணம் என்பதை இப்போது உணர்கின்றான்………….. இதனை அடிப்படையாகக் கொண்டு அமைந்த ஒரு **சிறுகதை.**

**(25 புள்ளிகள்)**

(3). பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் உமது வசன நடையில் எழுதுக.

இயல் எனும் போது இலக்கியத்தையே நாம் முக்கியமாகக் கருதுகின்றோம். ஏட்டில் எழுதப்பட்டவையே இலக்கியம் என்ற குறுகிய கருத்து ஒரு காலத்தில் நிலவியது. ஆயினும் ஏட்டில் எழுதப்படாது மக்களிடையே வாய்மொழியாக வழங்கி வரும் பாடல்களும் இன்று இலக்கியம் என ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இலக்கியம் வாழ்க்கையோடு தொடர்புடையது. வாழ்க்கையிலிருந்து மலர்வது வாழ்க்கைக்கு விளக்கம் தருவது வாழ்க்கையை வளமாக்குவது என்று சொல்வதற்கு சாலவும் தகுதியுடையனவேயாகும்.

நாட்டார் பாடல்கள் மக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பின்னிப் பிணைந்துள்ளன. மக்களின் எல்லா வகையான மனவுணர்ச்சிகளையும் அவை வெளியிடுகின்றன. கேட்போரிடம் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, நடுநிலை எனும் ஒன்பான சுவைகளையும் உண்டாக்க வல்லன. தாலாட்டு முதல் ஒப்பாரி வரை எல்லா வகையான அனுபவங்களையும் அவை பொருளாகக் கொண்டுள்ளன. உண்மையிலேயே நாட்டாரிலக்கியம் ஈன்ற குழவியே ஏட்டிலக்கியமாகும். நாட்டிலக்கியத்தில் நாம் இயற்கை அழகைக் காண்கின்றோம். ஏட்டிலக்கியத்தில் நாம் செயற்கை அழகைக் காண்கின்றோம்.

**(10 புள்ளிகள்)**

(4). பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரண வாக்கியங்களில் விடை எழுதுக.

**சென்றதினி மீளாது மூடரே! நீர்**
**எப்போதும் சென்றதையே சிந்தை செய்து**
**கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து**
**குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம்**
**இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீவிர்**
**எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு**
**நின்று விளையாடியின்புற் றிருந்து வாழ்வீர்,**
**தீமையெலாம் அழிந்துபோம்.**

i. கவலைக் குழியில் வீழ்ந்து தவிப்போர் யார்?
ii. எத்தகைய எண்ணத்தை மனதில் இருத்தல் வேண்டும்?
iii. தீமை எப்போது அழிந்து போகும் என கவிஞர் குறிப்பிடுகின்றார்?
iv. இக் கவிதைக்குப் பொருத்தமான தலைப்பொன்று தருக?
v. திரும்பி வராது எனக் குறிப்பிடப்படுவது எது?

**(10 புள்ளிகள்)**

(5). **"போஷாக்குள்ள உணவுகளை உட்கொள்வதன் அவசியம்"** எனும் தலைப்பிலான கட்டுரையைப் பிரசுரிக்குமாறு கோரி பத்திரிகை ஆசிரியருக்கு ஒரு **கடிதம்** எழுதுக.

**(15 புள்ளிகள்)**


kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## முதலாந் தவணைப் பரீட்சை – 2016
### தமிழ் மொழியும் இலக்கியமும் III

சுட்டெண் :. ........................................ தரம் : 10 நேரம் :- 2.00 மணித்தியாலங்கள்

- ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1.2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ் வினாத்தாளுக்குரிய மொத்தப் புள்ளிகள் 80 ஆகும்.

01.

I. 'வெற்றிவேற்கை' எனும் நூலின் ஆசிரியர் பெயர் யாது? இந்நூலின் மறுபெயர் யாது?

II. பொழிந்த நெய்யாகுதி வாய்வழி பொங்கி எழுந்த கொழுங்கன லென்ன எழுந்தார்-இங்கு கையாளப்பட்டுள்ள அணியாது?

III. நாலடியார் எனும் நீதிநூல் எத்தனை அதிகாரங்களாக வகுக்கப்பட்டுள்ளது

IV. பின்வருவனவற்றைப் பிரித்து எழுதுக.
தண்டாமரை
தெண்ணீர்

V. சென்னைச் சர்வகலாசாலையார் முதன்முதல் நடத்திய பீ.ஏ பரீட்சையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் சித்தியடைந்தனர். அவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

VI. வேரெடுத்து சுதந்திர நற்பயிர் வீழ்ந்திடச் செய்தல் .... இப்பாடலடியில் இடம்பெற்றுள்ள அணி யாது? விளக்குக.

VII. அ.ஆறுமுகநாவலர் அவர்களின் ஆசீர்வாதத்தால் சேர்.பொன் இராமநாதனுக்குக் கிடைத்த பதவி யாது?
ஆ.அந்நாட்களில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாருக்கும் பிராமணர்களுக்குமிடையே நடைபெற்ற பாரிய வழக்கில் கோயிலாருக்கு ஏற்பாட்டாளராக விளங்கியவர் யார்?

VIII. இனியவை நாற்பது எனும் நீதிப்பாடலில் கூறப்படும் இனிதான செயல்களில் எவையேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

IX. அண்ணல் யானை, அணிதேர் புரவி ஆட்பெரும்படை யொடு..............என்பதில் குறிப்பிடப்படும் நால்வகைப் படைகளையும் தருக.

X. கீழ்வரும் சொற்களின் பொருளை எழுதுக.
நித்திலம்
நிந்திப்பர்
வெகுளி
நண்ணுதல்

(10x2 = 20புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைநடைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது உரைநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களிலுள்ள தொடர்களின் சிறப்பை விளக்கி எழுதுக.

அ. தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்து
கமல மது வுண்ணும்
**பண்டே பழகியிருந்தாலும் அறியார்**
**புல்லர்** நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
கலப்பர் கற்றோரே.

ஆ. <u>உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்</u>
தப்பிய கந்தைபீ தாம்பரம்போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண் டதுமா ளிகை

இ. <u>பிறிற்றோ என்பவர் பிரசித்தி பெற்ற பழுத்த வழக்கறிஞர்</u>. அக்காலத்துச் சட்ட நிபுணர்களுள்ளே தலைசிறந்தவர் அவர். இலங்கையிலேயுள்ள எல்லாரும் அவரை அறிவர். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அவருக்குப் பெரிய பேர். பாரிய வழக்கு களுக்கும் அப்பீல்களுக்கும் அவனர நியமிப்பது வழக்கம். அவருக்கு யாழ்ப்பாணத்தில் அளவுகடந்த செல்வாக்கு அந்த நாட்களில் இருந்தது.

ஈ. அன்று நடந்த கூட்ட நிகழ்ச்சியோடு பிறிந்றோவின் பிரதிநிதித்துவக்கதை நின்றுவிட்டது ஆறுமுகநாவலர் அவர்களின் ஆசீர்வாதத்தால் சேர். பொன். இராமநாதன்துரை அன்று தொடக்கம் அரை நூற்றாண்டுக்கு மேல் இலங்கைச் <u>சட்டசபையில் ஓரிலங்கைச் சிவப்பாயிருந்து விளங்கினார்</u>.

**(4x5=20 புள்ளிகள்)**

03. நாவலர் எழுந்தார் எனும் கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ. ஆறுமுகநாவலரின் திறமையும் நேர்மையும்
ஆ. விசுவநாதபிள்ளையின் தனித்துவப் பண்புகள்
இ. பிறிற்றோவின் பலமும் பலவீனமும்

**(5+5+5=15புள்ளிகள்)**

**அல்லது**

3. பாரதியாரின் **'பிள்ளைக்காதல்'** என்னும் பாடற் பகுதியினை ஆதாரமாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அ. ஒருவர் தாம் விரும்பும் நலன்களை அடைவதற்கு எவ்வாறு முயற்சிக்க வேண்டும்?
ஆ. ஒருவர் தாம் விரும்பியவற்றை அடைய இயலாமற் போவதற்கான காரணங்கள்
இ. இப்பாடற் பகுதியில் வந்துள்ள உவமைகள்

**(3+6+6 =15புள்ளிகள்)**

04. நீதிப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அ. நாலடியார் காட்டும் நட்பு
ஆ. நல்லாதனாரின் நீதிக் கருத்துக்கள்
இ. அடக்கமுடையவரின் இயல்பு.

**(5+5+5=15 புள்ளிகள்)**

**அல்லது**

4. உவமைகள் மூலம் நீதிக் கருத்துக்கள் பொருத்தமுற வெளிப்படுவதனை நீதிப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

**(15 புள்ளிகள்)**

05. உருவத்தில் பெரியோரெல்லாம் பெரியருமல்லர் சிறியோரெல்லாம் சிறியருமல்லர். என்பதை வெற்றிவேற்கை ஆசிரியர் எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார்.

**(10புள்ளிகள்)**

06. நாவலர் எழுந்தார் எனும் கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
அ.விவாதம் செய்ய எழுந்த நாவலரின் தோற்றப்பொலிவு
ஆ.கட்டுரையாசிரியரின் மொழிநடைச் சிறப்பு.

**(10புள்ளிகள்)**

07. கற்றார்முன் கல்வி உரைத்தல்.........................
யானை அனையவர்.....................................
எனும் நீதிப்பாடல்களில் கூறப்படும் அறக்கருத்துக்களைத் தொகுத்துத் தருக

**(10புள்ளிகள்)**

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT
## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page